மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Valangaiyar, Idangaiyar in Modi documents – A Perspective Study

Dr. A. Raja[1], Dr. T. Athithan[2], Dr. C. Velmurugan[3]

Head, Dept.of Museum[1], Associate Professor, Dept.of Rare Paper Manuscripts[2], Head, Dept.of Library and Information Science[3], Tamil University, Thanjavur

Manuscript ID : **MT23A0014**

Volume : **1**

Issue : **2**

Month : **December**

Year : **2021**

Received: 03.12.2021

Revised: 05.12.2021

Accepted: 08.12.2021

Published: 17.12.2021

Pages : 8-16

ABSTRACT:

The records of the valangaiyar and idangaiyar in the Modi documents of the Marathas in power in Thanjavur have been examined. The ethnic numbers of the valangaiyar and idangaiyar are differently recorded in different documents. According to Modi documents, there were 24 valangaiyars (right wingers) living in the Pudukkottai areas and nine idangaiyars (left wingers). Evidence of valangai and idangai due to caste differences somehow underscores the discrimination that caused both factions to stand in a team. The study also highlights the benefits shown to right-wingers. The study also highlights the benefits shown to the valangaiyar and idangaiyars. When these are further examined it is possible to know the caste hierarchy of that period.

KEYWORDS:

Modi Document, Valangaiyar, Idangaiyar, Caste Organization, Pudukkottai Rajadhani, Modi Agreement

REFERENCES :

1. Annual Report of Epigraphy 1921, Archaeogical survey of India, New Delhi, 1921:No.47.
2. Annual Report of Epiraphy 1913, Archaeogical survey of India, New Delhi, 1913:No.39.
3. South Indian inscriptions,vol.I :No.111, Archaeogical survey of India, New Delhi.
4. T.Athithan, Thanjai maratthiya mannar modi aavana yaanai maruththuvam, Marabusaar ariviyai, anaithinthiya ariviyalthamizhk kazhakam, Thanjavur, 2017.
5. T.Athithan, Thamizhakaththil maratthiya modi aavanam, Amuthasurabi Thamizh matha malar 73, ithazh 8, Chennai, 2020.
6. S.Ramachandran, Valangaimaalaiyum saantror samoogach cheppedugalum, World Tamil Reseach Instituite, Tharamani, Chennai, 2004.
7. B.Subramaniyan, Thanjai Maratthiyar modi aavana thamizhaakkamum kuribburaiyum, Vol.II, Tamil University, Thanjavur, 1989.
8. A.Thasarathan, Valangai Saantrorum chozharum (Thamizh kathaibbaadal Chuvatigalil varalaatraayvu), Tamil manuscripts preservation centre, Kottivakkam, Chennai, 1995.
9. Venkatramaiah, Thanjai maratthiyar mannarkaala arasiyalum samuthaaya vaazhkkaiyum, Tamil University, Thanjavur, 1984.

மோடி ஆவணங்களில் வலங்கையர், இடங்கையர் - ஒரு கூர்நோக்கு ஆய்வு

முனைவர் ஆ.ராஜா[1], முனைவர் த.ஆதித்தன்[2], முனைவர் சி.வேல்முருகன்[3]

தலைவர், அருங்காட்சியகத் துறை[1],

இணைப் பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித் துறை[2],

தலைவர், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை[3],

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கட்டுரைச் சுருக்கம்

தஞ்சாவூர் பகுதியில் அதிகாரத்தில் இருந்த மராட்டியர்களின் மோடி ஆவணங்களில் இடம்பெற்றுள்ள வலங்கையர், இடங்கையர் குறித்த பதிவுகளே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. வலங்கை, இடங்கையர்களின் இன எண்ணிக்கை பல்வேறு ஆவணங்களிலும் பல்வேறு வகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மோடி ஆவணங்களின் அடிப்படையில் புதுக்கோட்டை பகுதிகளில் வாழ்ந்த வலங்கைப் பிரிவுகள் 24 என்றும், இடங்கையினர் ஒன்பது என்றும் அறியமுடிகிறது. வலங்கை, இடங்கை குறித்த சான்றுகள் சாதிய வேறுபாடுகளினால் ஏதோ ஒரு வகையில் இருபிரிவினரும் ஒரு அணியில் நிற்பதற்குக் காரணமாக இருந்த பாகுபாடுகளை எடுத்துரைப்பதாய் அமைகின்றன. வலங்கை, இடங்கையர்களுக்குக் காட்டப்பட்ட சலுகைகளும் ஆய்வில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றை இன்னும் மேலாய்வுக்கு உட்படுத்தும் போது அந்த காலக்கட்ட சாதிய படிநிலையை அறிந்து கொள்ளமுடியும்.

கருச்சொற்கள்

மோடி ஆவணம், வலங்கையர், இடங்கையர், சாதி அமைப்பு, புதுக்கோட்டை ராஜதானி, மோடி உடன்படிக்கை.

முன்னுரை

தொல்லியல் சான்றுகள், இலக்கியங்கள், அயலவர் குறிப்புகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், சிற்பங்கள், ஓலைச்சுவடிகள், தாள் ஆவணங்கள் போன்றவைகள் தமிழரின் தொன்மை, வரலாறு, பண்பாடு, சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்ள பெரிதும் துணை புரிகின்றன. அண்மைக் காலங்களில் தொல்லியல் ஆய்வாளர்கள், தாங்கள் மேற்பரப்பாய்வின் வாயிலாகக் கண்டறிந்தச் சான்றுகளைச் சமூக வரலாற்றாய்வுக்கு உட்படுத்தி புதிய கருத்துகளை அளித்து வருகின்றனர். அவ்வாறு மேற்சுட்டிய தரவுகளின் வழி வலங்கை-இடங்கை பற்றிய பல கருத்துகளும் முரண்பாடுகளும் வந்துள்ளன.

அவ்வகையில் தாள் ஆவணங்களில் குறிப்பாக மராட்டியர் ஆட்சிக் காலத்தில் அரச அலுவல் மொழியாகத் திகழ்ந்த மோடியில் ஏராளமான ஆவணங்கள் உள்ளன. அவற்றில் வலங்கை-இடங்கை குறித்த செய்திகளும் அரிய வகையில் காணக்கிடைக்கின்றன. அவற்றைப் பற்றிய பதிவுகள் இது காறும் ஆய்வாக வெளிவரவில்லை எனலாம். எனவே அதை நிறைவுசெய்யும் பொருட்டு, சமூக வரலாற்றுப் பண்பாட்டுக் கூறுகளை ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மானுடவியலாளர்கள் இந்திய சமுதாயத்தில் சாதி அமைப்பே ஆதிக்கம் செலுத்தி வந்ததாகத் தெரிவிக்கின்றனர். நமது வரலாற்றில் சமூகங்களுக்கு இடையேயான பூசல்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் அறியமுடியும். குறிப்பாகப் பிற்காலச் சோழர் காலச் சமுதாயத்தில் பல்வேறு சாதிமுறைகள் வளர்ச்சியடைந்துள்ளன. அவற்றிற்கு இடையே பூசல்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றை பல்வேறு சான்றுகளால் அறியமுடிகிறது. குறிப்பாகச் சோழர் காலத்தில் ஓங்கி வளர்ந்த குல வேறுபாடுகளே வலங்கை - இடங்கை பிரிவு வேறுபாடுகள் வலிமைபெறுவதற்குக் காரணம் எனலாம். மதுரை நாயக்கர் காலத்தில் குல வேறுபாடுகள் வலிமையாகவே இருந்துள்ளன. இதனை கி.பி.1623ஆம் ஆண்டு நாயக்கர் சாசனத்தின் வழி அறியலாம்.

இதேபோன்று தஞ்சாவூரை ஆண்ட மராட்டியரின் மோடி ஆவணங்கள் வாயிலாகவும் வலங்கை – இடங்கையர் பாகுபாடு இருந்ததை அறியமுடிகிறது.

மோடி ஆவணம்

மராட்டிய மொழியின் தேவநாகரி எழுத்து வடிவத்தை மாற்றி உருவாக்கப்பட்ட புதிய வரிவடிவமே மோடி எழுத்துகள் ஆகும். மோடி என்னும் இரகசிய எழுத்துருவில் அமைந்த ஆவணங்கள் ஏராளமாகத் தமிழகத்தில் உள்ளன.

பதிமூன்றாம் நூற்றாண்டில் மகாராஷ்டிரப் பகுதியில் ஆட்சி புரிந்த தேவகிரி அரசர்களின் அமைச்சராக இருந்தவர் ஹேமாட்பந்த். அவர் மராட்டிய மொழியின் தேவநாகரி எழுத்துருவைச் சுருக்கெழுத்துப் போன்று மாற்றி எழுதும் முறையை உருவாக்கினார். இம்முறையே மோடி எழுத்து முறையாயிற்று. இந்த “மோடி” என்னும் சொல் “மோடணே” என்ற மராத்தி மொழியில் இருந்து வந்தது என்று பா.சுப்ரமணியன் கருதுகிறார். மோடணே என்பதற்கு மராட்டிய மொழியில் உடைதல் அல்லது சிதைதல் என்று பொருள் (பா.சுப்ரமணியன், 1989:ப.1). அரசின் இரகசியங்களைக் காப்பதற்காக எழுதப்படும் எழுத்துருவாக மராட்டிய மன்னர்களால் மோடி பயன்பட்டுள்ளது.

இவ்வெழுத்து முறையில் குறில், நெடில் வேறுபாடுகள் கிடையாது. தேவநாகரியிலுள்ள பல எழுத்துகள் குறைக்கப்பட்டுள்ளன. நீண்ட கோடினை இட்டு, பின்னர் எழுதுகோலை எடுக்காமல் தொடர்ச்சியாக எழுதும் முறையில் இவ்வெழுத்துரு உள்ளது. இவ்வெழுத்துருவை அதில் புலமையடைந்தவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். இத்தகைய ஆவணங்கள் மிகுதியாகத் தமிழகத்தில் உள்ளன. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மராட்டியர்கள் தஞ்சையைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். அப்பொழுது அதிகாரத்தில் இருந்த மராட்டியர்கள் தங்கள் அரச அலுவல் ஆவணங்களில் பெரும்பாலானவற்றை மோடி எழுத்துருவிலேயே எழுதியுள்ளனர். மராட்டியக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த தமிழகப் பகுதிகளில் ஆட்சி மொழியாகவும், அலுவல் மொழியாகவும் மோடி இருந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

தஞ்சையைத் தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி செய்த முதல் மராத்திய மன்னர் ஏகோஜி. அவருடைய ஆட்சி கி.பி.1676இல் தொடங்குகிறது. அது முதல் கி.பி.1855இல் இரண்டாம் சிவாஜியின் ஆட்சி முடியும் வரையிலான காலகட்டங்களில் எழுதப்பட்ட தஞ்சை மராட்டிய அரச ஆவணங்கள் எல்லாம் பெரும்பாலும் மோடி எழுத்துருவில் அமைந்தனவாகும் (த.ஆதித்தன், 2020:ப.48-50).

வலங்கை - இடங்கை

நமது நாட்டில் சாதிகள் பல இருந்தாலும் அதில் சில ஒரு கூட்டாகவும், பிற சாதிகள் ஒரு கூட்டாகவும் இருந்துள்ளன. அச்சாதிகளைச் சேர்ந்தவர்களுக்குள் வேறுபாட்டுணர்ச்சி தோன்றியபோது அரசரிடம் முறையிட்டனர். அவ்வாறு முறையிடும்போது அரசனது வலது பக்கத்தில் இருப்பவர் வலங்கையர் என்றும், இடது பக்கத்தில் இருப்பவர் இடங்கையர் என்றும் கூறப்பெற்றனர் என்பர் (A R E, 1921:47). ஆனால் மானுடவியல் ஆய்வாளர்களால் இக்கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது குறித்து தனியாக மேலாய்வு மேற்கொள்ளலாம்.

இப்பிரிவுகளின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துகள் ஆய்வாளர்கள் மத்தியில் இருந்துவருகின்றன. கரிகாற்சோழன் காலத்தில் மக்கள் இரண்டு பிரிவுகளாக இருந்துள்ளனர். இதில் ஒவ்வொரு பிரிவிலும் 98 சாதியினர் இருந்துள்ளனர் (கே.எம்.வேங்கடராமையா, 1984:ப.29). காச்யபர் ஒரு வேள்வி செய்தார் என்றும், அதனை அழிக்க வந்த அசுரர்களை அழித்தற்பொருட்டு அவருடைய யாககுண்டத்தினின்று இடங்கைச் சாதியினர் தொண்ணூற்று எட்டுப் பிரிவினர் தோன்றினர் என்றும், சக்கரவர்த்தி அத்தியமான் வேள்வி செய்தவர்களைச் சிறப்பித்து ஒரு பார்ப்பனச் சேரிக்குக் கொண்டுப்போய் விட்டனன் என்றும், அவர்கள் திருவெள்ளறை முதலாகிய ஊர்களில் தங்கினர் என்றும், கல்வெட்டு ஒன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது (A R E, 1913:39).

வலங்கை என்பது பெருஞ்சாதிப் பிரிவுகளில் ஒன்று என்றும், அதற்குள் 98 சாதிகள் அடங்கும் என்றும் ஆராய்ச்சிளார்கள் கருதுகின்றனர் (ஆ.தசரதன், 1995:ப.23). அதேபோன்று படைப்பிரிவினர் மிகுதியாகத் தேவைப்படும்பொழுது அரசனின் இடது பக்கம் இருந்தவர்களைக் கொண்டு படை உருவாக்கும்பொழுது அப்படைப்பிரிவினரை இடங்கையினர் எனக் கருதினர். இதிலும் 98 சாதியினர் இருந்துள்ளனர் என்பது ஊகம். வலங்கை – இடங்கை என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையில், வலங்கையினர் உயர்ந்தவரா, இடங்கையினர் உயர்ந்தவரா என்ற மோதல் இருந்துள்ளது. இதனால் இவர்களிடையே பல பூசல்கள் நிகழ்ந்துள்ளன. இதன் காரணமாக நாட்டில் பல மோதல்களும் அழிவுகளும் ஏற்பட்டுள்ளன. வலங்கை என்பதைச் சான்றோர் படைப்பிரிவு எனக் கொள்வதே சிறப்பு எனக் ஆ.தசரதன் கருதுகிறார். மேலும், இப்படை உறுதியானதும், பெருபான்மையைக் கொண்டதும் என்கிறார் இவர்.

உடலுறுதி கொண்டோர் வலங்கைப் பிரிவினர். கற்பனைமிகுதி கொண்ட கைவினைஞர்களே இடங்கையர் ஆவர். உடலுறுதி கொண்டவர்கள் வலங்கைப் படையினர் என்பதால் தான் போருக்கு அவர்களை பயன்படுத்துவர். அவ்வாறான வலங்கைப் படையில்லாத காலத்தில் தான் இடங்கைப் படை உதவும். முதலாம் இராசராசன் காலத்தில் வலங்கைப் படையினர் உருவாக்கப்பட்டனர் என்றும், இலங்கையில் கோட்டைக் காவலில் இருந்த வலங்கைப் படையினர் சிங்கள மன்னனுக்கு எதிராக கலகம் செய்து, முதலாம் விசயபாகு (கி.பி.1059-1114) இடங்கைப் படையினை உருவாக்கியதாகவும் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அதுவும் காலம் தாழ்ந்தே உருவாகியதாகவும், அதன் காரணமாக வலங்கைப் படைகளிடமே ஒப்பந்தம் செய்து கொள்ளும் நிலை உருவானது என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதிலிருந்து வலங்கைப் படை சோழநாட்டில் உருவானது என்றும் இடங்கைப் படை இலங்கையில் உருவானது என்றும் ஒரு கருத்தாக்கம் உள்ளது.

தமிழ்ப் பேரகராதியானது வலங்கையினர் தமிழ் நாட்டுச் சாதிகளுள் ஒருசார் கூட்டத்தினர் என்று கூறி படைவீட்டு ராஜ்யம் நாட்டவர் வலங்கையும் இடங்கையும் மஹாஜனமும் (S I I, (i):111) எனும் கல்வெட்டு வரியினையும் எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் வலங்கை-இடங்கைப் பிரிவினர் கர்நாடகாவிலும், கேரள நாட்டிலும் இருந்ததைக் காணமுடிகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சோழப் பேரரசில் சில சாதியர்களிலிருந்து படைவீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களே வலங்கைப் பிரிவினர் என வரலாற்றாய்வாளர் கே.கே.பிள்ளை கருதுகிறார் (ஆ.தசரதன், 1995:ப.24-26). எனவே, வலங்கை-இடங்கைப் பிரிவினர் சோழர் ஆட்சிக் காலத்தில் வலிமை பெற்ற படைப்பிரிவினர்களாக இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

மராட்டிய மோடி ஆவணங்களில் வலங்கை - இடங்கை

பண்டைய நாள் முதல் இவ்விரு வகையினர்களுக்கும் இடையே ஏற்பட்ட பூசல்களைத் தீர்த்துவைத்தமைக்குப் பல சான்றுகள் உள்ளன (கே.எம்.வேங்கடராமையா,1984:ப.409). இதே போன்று மராட்டியர் ஆட்சிக்காலத்திலும் இப்பிரிவினருக்கிடையேப் பூசல்கள் ஏற்பட்டுள்ளன. அப்போதைய மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜியிடம் இப்பூசல் குறித்து மக்கள் முறையிட்டனர். அப்போது நன்மை, தீமை ஆகியவைகள் நடக்கும்பொழுது ஒவ்வொருவரும் எவ்வாறு நடந்துகொள்வது என்று அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்தீர்மானத்தின்படி நடக்கத் தவறினால் அரசுக்கு சக்கரம் 12 அபராதம் செலுத்தி அரசின் உத்தரவுக்கு ஆஜராகிறோம் என்று 1830 இல் உறுதிமொழிக் கொடுத்துள்ளனர்.

உடன்படிக்கை

வலங்கை, இடங்கையருக்கு இடையேயான உடன்படிக்கை ஒன்று மோடி ஆவணத்தில் இடம்பெற்றுள்ளது. அதில் இடம்பெற்றுள்ள செய்தியானது, தஞ்சை மேலவீதியில் பச்சண்ணா சந்தில் இருக்கும் வலங்கை இடங்கை என்னும் இரண்டு பாஞ்சாளர்கள் (“தட்டான்,கன்னான், சிற்பன், தச்சன், கொல்லன்” யெடங்கைஞைச் சேர்ந்த பஞ்சாளக்காற கம்மாளர் (Tamil Lexicon: 8-15) தங்களுடைய கல்யாணத்தில் புழங்கவேண்டிய முறைபற்றி ஸர்க்காரில் எழுதிக்கொடுத்த உடன்படிக்கை. 1843க்குரிய குறிப்பால் இரணுடாம் சிவாஜி காலத்தில் கல்யாண காலத்தில் பழக்கவழக்கங்கள் பற்றி இருசாராருக்கும் வேறுபாட்டுணர்ச்சி வந்திருத்தல் வேண்டும் என்றும், அதுபற்றி உடன்படிக்கை செய்து கொண்டனர் என்றும் தெரியவருகிறது.

புதுக்கோட்டை ராஜதானி: அங்கு வலங்கை இடங்கை என்கிற இரு பிரிவுகள் இவர்களுக்குள் நன்மை தீமை முதலியனவை நடத்துவதில் மனவேற்றுமை ஏற்பட்டது. இவ்வேற்றுமையை புதுக்கோட்டையில் தீர்த்துக்கொள்ளாமல் தஞ்சாவூரில் தீர்த்துக் கொள்வதற்குப் புதுக்கோட்டை ரெஸிடெண்டு இடம் இருந்து பரிந்துரைக் கடிதம் பெற்று வந்தனர். வலங்கையைச் சேர்ந்தவர் வலங்கை பெரியதனக்காரன் நாராயணசெட்டி மகன் அளகிரி செட்டி, இடங்கையைச் சேர்ந்தவர் இடங்கை பெரியதனக்காரன் நாராயண ஆசாரி இவர்கள் இருவரும் தஞ்சாவூர் சமஸ்தானம் ‘‘ஹிஸ் ஹைனேக ராஜஸ்ரீ மகாராஜா சாயபு அவர்களுடைய ஊர்கேல் ராஜஸ்ரீ பாலாஜி பண்டிதர் அவர்களை அணுகினர். அவர் ஆணையின்படி தக்க அலுவலர்கள் இவ்விருவரையும் விசாரித்தனர். விசாரணையின் முடிவில் அவ்விருசாராரும் சமாதானம் ஆகிப்போனபடியினால் ஓர் உடன்படிக்கை எழுதிக்கொண்டு அதன்படி நடந்துக்கொள்வதாக எழுதிக் கொடுத்துள்ளனர் (கே.எம்.வேங்கடராமையா, 1984:ப.409-410).

பிரிவினர் விசாரணை

இரண்டு விசாரணைகள் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. முதல் விசாரணையில் வலங்கையைச் சேர்ந்தவர்கள் யார் என்றும், இரண்டாம் விசாரணையில் இடங்கையைச் சேர்ந்தவர் யார் என்றும் விசாரிக்கப்பட்டது. இதில் வலங்கைச் சேர்ந்தவர்கள் 22 சாதினர் என்றும், இடங்கையைச் சேர்ந்தவர் ஆறு என்றும் தெரியவந்தது. அப்பிரிவினர் பின்வருமாறு:

ரெட்டி வடுகர், கமல வடுகர், தொளுவ வடுகர், தொளுவ செட்டி வெள்ளாள செட்டி, குத்தி கொல்லர், ரெங்காரி வடுகர், சேணியர், சலுப்பன், இடையர், சாலியக்காரன், கோமுட்டி, கண்ணாப்புக்காரன், மாறாய செட்டி, உப்பிலியன், சாணான், மேளக்காரன், வலையர், தெலுங்க அம்பட்டன், தமிழ அம்பட்டன், வண்ணான், வாணியன் முதலானோர் வலங்கைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

பேல செட்டி, கை காளர், பள்ளி, படையாச்சி, மறவர், மேளக்காரன் முதலானோர் இடங்கை பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். மற்றொறு விசாரணை நடைபெற்றது. இதில் வலங்கைச் சேர்ந்தவர்கள் 24 சாதியினர் என்றும், இடங்கையைச் சேர்ந்தவர்கள் ஒன்பது சாதியினர் என்றும் கூறப்பட்டன. முதல் விசாரணையில் வலங்கை 22 என்று உள்ளது. இவற்றோடு கவரை செட்டி, பறையன் அகிய இருவரையும் சேர்த்து 24 என்றனர். இடங்கை பிரிவினர் முதல் விசாரணையில் ஆறு என்று கூறப்பட்டது பிறிதொரு விசாரணையில் பஞ்சாளத்தார், பள்ளன், சக்கிலியன் ஆகிய மூவரையும் சேர்த்து ஒன்பது என்று கூறப்பட்டது.

கீழ்திசைச் சுவடிகள் கூறும் வலங்கை இடங்கை

அரசினர் கீழ்திசைச் சுவடிகள் நூலகத்திலிருந்து சுவடிகள் படியெடுத்து வெளிக்கொணரப்பட்ட “இடங்கை வலங்கை சாதியார் வரலாறு” என்ற பெயருள்ள மெக்கன்சி சுவடியின் தொடக்கத்தில் வலங்கை 98 சாதிகள் பெயரும், இடங்கை 98 சாதிகள் பெயரும் காணப்பெறுகின்றன (கே.எம்.வேங்கடராமையா, 1984:ப.411). கரிகாற்சோழன் இரண்டு பிரிவுகளாக மக்களைப் பிரித்தார் என்றும், ஒவ்வொரு பிரிவிலும் 98 சாதியினரை அமைத்தார் என்றும், ஒருசாரார் கூறுவர் (ARE, 1921, part II: 47, pp.33-34). இவ்வாறு ஒவ்வொரு பிரிவிலும் 98 என கூறப்படும்போதுப் புதுக்கோட்டையிலிருந்து வந்த இருவரை முதல் விசாரணைக்கு உட்படுத்தும்போது வலங்கை 22 சாதியினர், இடங்கை 6 சாதியினர் என்றும், இரண்டாம் கட்ட விசாரணையில் வலங்கை 22 சாதியினர், இடங்கை 9 சாதியினர் என்றும் கூறியதைக் கொண்டு நோக்கும்போது புதுக்கோட்டைப் பகுதியில் இருந்த சாதிகள் அவை மட்டுமோ என எண்ணத் தோன்றுகிறது.

மேலும் மெக்கன்சி சுவடியில் கொடுக்கப்பெற்றுள்ள பெயர்களோடு வாக்கு மூலத்தில் கொடுத்த பெயர்கள் ஒத்துவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருமணத்தின்போது பந்தல்போடுதல், வாத்தியங்கள் வாசித்தல், ஊர்வலம் வருதல், ஊர்வலத்தின்போது எத்தகைய ஆடை ஆபர்ணங்களை அணிதல், எந்த வாகனங்களில் ஊர்வலம் வருதல் ஆகியவை பற்றி வலங்கை இடங்கை இருப்பிரிவினர்களுக்கிடையே மனவேறுபாடுகள் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

இவர்களுக்குள் மனவேறுபாட்டுணர்ச்சி ஏற்பட்டத்தால் இன்பதுன்ப நிகழ்வுகளில் அவரவர் விருப்படி மகிழ்ச்சியுடன் அனுபவிக்க முடியாத சூழல் நிலவியிருந்ததைக் காணமுடிகிறது. அதனால் இவர்கள் தீர ஆலோசனைக்கு உட்பட்டதன் விளைவாக மனவேறுபாட்டுணர்ச்சி விவேகத்தாழ்வானது என அறிந்தனர். அதனால் கவுரவத்திற்கும் நியாயத்திற்கும் விரோதம் என உணர்ந்த இவர்கள் சாமாதானம் ஆகி அரண்மனையார் செய்த தீர்மானப்படி தவறாமல் நடந்து கொள்வதாக உறுதி கூறினர்.

வலங்கை மற்றும் இடங்கை பிரிவினர்கள் கல்யாணக் காலத்தில் எவ்வித ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம் என்று அரண்மனையார் உத்தரவு பிறப்பித்துள்ளனர். அதன்படி இருசாராரும் தங்கள் குடும்ப நல்ல நிகழ்வுகளில் பந்தல் அமைத்தல், வாழை மரம் கட்டுதல், கொடி கட்டுதல், ஆடை அணிகலங்கள் அணிதல், மேளதாளங்கள் வைத்தல், ஊர்கோலம் செல்வதற்கு யானை, வெள்ளை குதிரை, பல்லக்கில் வருதல் போன்றவைகளுக்கு அனுமதி அளித்து தீர்மானத்தின்படி தவறாமல் நடந்துகொள்ள கூறியுள்ளனர்.

இவற்றை தவிர பொது நிகழ்வுகளில் அதாவது கோயில், திருவிழா ஆகியவற்றிற்குச் செல்லும்போது அவர்களுக்கென்று வகுக்கப்பட்டுள்ள வாண வாத்தியத்துடன் செல்லலாம். அதேபோன்று வலங்கையைச் சேர்ந்த தொழிலாளி இடங்கையரிடம் பணிசெய்ய நேரிட்டால் யாதொரு தடையுமின்றி பணி செய்யலாம்.

இதேபோன்று தமிழகமெங்கும் பூசல்கள் நடைபெற்ற வண்ணம் தான் இருந்துள்ளன. அதை அவ்வப்போது ஆளும் வர்க்கத்தினர் தலையிட்டு தீர்த்து வைத்துள்ளனர். அவ்வாறு புதுக்கோட்டையில் நிகழ்ந்த பூசல்களை தஞ்சாவூர் சமஸ்தானத்தார் தீர்த்து வைத்துள்ளனர். இங்கு திருமண நிகழ்வுத் தொடர்பான பூசல்களே அதிகம் நடைபெற்றதனை அறியமுடிகிறது. பிற பூசல்கள் யாதும் நடைபெற்றனவா என்பது தொடர்பான செய்திகள் மோடி ஆவணத் தமிழாக்கத்தில் இடம்பெறவில்லை எனலாம்.

முடிவுரை

தஞ்சை மராட்டியர்களின் மோடி ஆவணம் பல்வேறு சாதியினரும் ஒன்றோடு ஒன்றாய் கலந்து வாழ்வதற்கு அப்போதைய சமூகச் சூழல் இடம் தரவில்லை என்பதை எடுத்துரைக்கிறது. அதாவது தஞ்சை மராட்டியர் ஆட்சி சாதிக்கலப்பைத் தடை செய்துள்ளது எனலாம். ஒவ்வொரு இனத்தாரும் தத்தமது திருமணச் சடங்குகளில் பின்பற்ற வேண்டிய முறைமைகளை வலியுறுத்துக்கூறுவதாலும், வழக்கத்தில் இருந்து மாறுபட்டால் அபராதம் என்கிற தரவு மோடி ஆவணங்களில் இருப்பதாலும் சாதியப் படிநிலை மிகவும் வலிமையான நிலையில் அக்காலத்தில் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. மொத்தத்தில் சோழர்கள் காலத்திலேயே வலிமைப் பெற்றிருந்த வலங்கை, இடங்கை இனப்பாகுபாடு தொடந்து நிலைபெற்று நாயக்கர், மராட்டியர் காலங்களிலும் வலிமையாக நிலைப்பெற்றிருந்திருக்கிறது எனலாம்.

தொகுப்புரை

1. இந்திய சமுதாய அமைப்பில் சாதிய அமைப்பு ஆதிக்கம் செலுத்தி வந்ததை மானுடவியல் ஆய்வுகளால் அறியமுடிகிறது.
2. தமிழகத்தில் முன்னர் வலங்கை, இடங்கை இனப்பாகுபாடு வேரூன்றியுள்ளது.
3. இந்த வலங்கை, இடங்கையர் பாகுபாடு குறித்தத் தரவுகள் தஞ்சாவூரை ஆண்ட மராத்தியரின் மோடி ஆவணங்களிலும் இடம் பெற்றுள்ளன.
4. இப்பிரிவுகளின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துகள் ஆய்வாளர்கள் மத்தியில் இருந்து வருகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் இடம்பெறும் சாதியரின் எண்ணிக்கையிலும் வேறுபட்ட கருத்துகள் உள்ளன.
5. உடலுறுதி கொண்ட வலங்கைப் பிரிவினர் போர்ப்படையினராக இருந்துள்ளனர். இவ்வலங்கைப் படை இல்லாதக் காலத்தில் இடங்கைப் படை போருக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.
6. வலங்கை – இடங்கைப் பிரிவினர் சோழர் ஆட்சிக் காலத்தில் படைப்பிரிவினர்களாக இருந்துள்ளனர்.
7. இவர்களிடையே இருந்த முரண் பூசல்களாகத் தொடர்ந்துள்ளது.
8. அரசர்கள் இவர்களுக்கு இடையேயான பூசல்களைத் தீர்த்துவைக்க வேண்டிய நிலையும் இருந்துள்ளது.
9. சோழர்காலத்திலேயே வலிமையடைந்த வலங்கை, இடங்கை குல வேறுபாடுகள் தஞ்சை மராட்டியர் காலத்திலும் நிலைபெற்றுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. ஆதித்தன்.த, (2017), தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவண யானை மருத்துவம், மரபுசார் அறிவியல், அனைந்திந்திய அறிவியல்தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.
2. ஆதித்தன்.த, (2020), தமிழகத்தில் மராட்டிய ஆவணம், அமுதசுரபி தமிழ் மாத மலர் 73, இதழ் 8, சென்னை.
3. இராமச்சந்திரன்.சீ, (2004), வலங்கைமாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும், உலகத் தமிழாய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
4. சுப்ரமணியன்.பா, (1989), தஞ்சை மராட்டியர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் தொகுதி இரண்டு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
5. தசரதன்.ஆ, (1995), வலங்கைச் சான்சோரும் சோழரும் (தமிழ்க் கதைப்பாடல் சுவடிகளில் வரலாற்றாய்வு), தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், கொட்டிவாக்கம், சென்னை.
6. வேங்கடராமையா.கே.எம், (1984), தஞ்சை மராட்டியர் மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. Annual Report of Epigraphy, Archaeological survey of India, New Delhi, 1921:No.47.
8. Annual Report of Epiraphy, Archaeological survey of India, New Delhi, 1913:No.39.
9. South Indian inscriptions, Archaeological vol.I:No.111.